# பட்டயம்

மலர் - 06 ஆகஸ்டு - 2010 இதழ் - 10

Date of Issue : 01-08-2010

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 6

Issue : 10 Price Per Copy : Rs.5.00




GIVE US THIS DAY OUR DAILY BREAD (MATTHEW 6:11)

படியளந்து போஷியும் கர்த்தாவே! (மத் 6:11)

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.org

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

## 170. தேவ சித்தம் செய்ய எப்படி ஜெபிக்க வேண்டும்?

1. ஜெபிக்காமல் தேவ சித்தம் செய்ய முடியாது. கர்த்தாவே! உம் சித்தம் செய்ய எனக்கு வாசல்களைத் திறந்தருளும் என ஜெபிக்க வேண்டும்.

2. கர்த்தர் திறந்து கொடுக்கும் வாசல் வழியாய் பிரவேசிக்க உதவி செய்யும்படி ஜெபிக்க வேண்டும்.

3. கர்த்தருக்குச் சித்தமில்லாத வாசல்களை கர்த்தரே தடை செய்யும்படி ஜெபிக்க வேண்டும்.

4. கர்த்தருக்குச் சித்தமான நபர்களை ஒத்தாசையாகத் தரும்படி ஜெபிக்க வேண்டும்.

5. தேவ சித்தத்தை தடை செய்யும் சாத்தனையும், துன்மார்க்கர்களையும் கட்டி ஜெபிக்க வேண்டும்.

## 171. தேவ சித்தம் செய்யும் போது என்னென்ன தடைகள் வரலாம்?

1. அவிசுவாசபடும்படியான சூழ்நிலை வரலாம்.
2. பின்வாங்கிப் போகும் அளவுக்கு சோதனை வரலாம்.
3. பயப்பட வேண்டிய சூழ்நிலை வரலாம்.
4. பண நஷ்டங்கள் வரலாம் - எபி 10/34
5. சாத்தான் சோதனையும், மனுஷர் சோதனையும் வரலாம்-எபி10/34
6. நிந்தைகள், உபத்திரவங்கள் வரலாம் - எபி 10/33

## 172. யாருக்கு நம்மை அடிமைகளாக ஒப்புக் கொடுக்க வேண்டும்?

தன் சொந்த இரத்தத்தை சிந்தி நம்மை ஆண்டவராகிய இயேசு மீட்டுக் கொண்டார். கிரயத்துக்கு நாம் கொள்ளப்பட்டோம். ஆகவே நாம் பிசாசுக்கோ, மனிதனுக்கோ அடிமையல்ல, சுயத்துக்கும் நாம் அடிமைகள் அல்ல. இதோ நான் ஆண்டவருக்கு மாத்திரம் அடிமை என ஒப்புக் கொடுக்க வேண்டும். நாம் அவர் அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாக, அவருக்கு ஊழியம் செய்கிறவர்களாக, அவர் அழைப்புக்கு இசைந்து நடக்கிறவர்களாக, அவருக்குப் பின்செல்லுகிறவர்களாக இருக்க வேண்டும். இப்படி நாம் நம்மை அடிமைகளாக ஒப்புக் கொடுக்க வேண்டும். தேவ சித்தம் எது என்பதைப் பகுத்தறிந்து, தோல்வி வந்தாலும்

அதைச் செய்து நிறைவேற்ற வேண்டும். அப்போது அவர் நமக்கு தாயாக, தகப்பனாக இருந்து நம்மைத் தேற்றி தூக்கிச் சுமப்பார்.

**173. நம் கண்கள் எப்படி இருக்க வேண்டும்?**

இயேசு தீமையை பார்க்க மாட்டாத சுத்த கண்கள் உடையவர். அவர் பரிசுத்த கண்கள் உடையவர். ஒரு மனிதனின் கண்களைப் பார்த்தாலே அவன் எப்படிபட்டவன் என்பதை ஓரளவு கண்டு கொள்ள முடியும். கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. ஆகவே நம் கண்களை நாம் கெடுத்துக் கொள்ளக் கூடாது.

மேட்டிமையான கண், இச்சைக் கண், கோபக்கண், பொறாமைக்கண், மதுபானக் கண் மாறி சாந்தமுள்ள கண்கள் வர வேண்டும். நம் கண்களில் சுத்தம் வேண்டும். புறாக்கண்களில் வஞ்சகம் இல்லை; கபடு இல்லை. பிறருக்கு தீமை செய்யாத கண்களாக நம் கண்கள் இருக்க வேண்டும். அப்போது கர்த்தர் நம்மைப் பார்த்து “என் புறாவே! என் ரூபவதியே” என அழைப்பார்.

**174. தேவகுமாரனை நாம் நம் சொந்த கண்களால் பார்க்க முடியுமா?**

பிதா தவிர வேறொருவரும் குமாரனை அறியான் (மத்.11/27). பிதாவின் மடியிலிருந்த குமாரனே அவரை வெளிப்படுத்தினார். (யோ 1/18). குமாரனின் முழு மகிமையும் அறிந்தவர் பிதா மட்டுமே. அதை எந்த மனிதனும் அறிய முடியாது. தேவகுமாரன் தான் மனுஷகுமாரனாய் வந்தார். தேவகுமாரன் எப்படி இருப்பார் என்பது நமக்குத் தெரியாது. பிதாவுக்கு மட்டுமே தெரியும். தேவகுமாரனை ஒருவனும் கண்டதில்லை. காணவுமுடியாது. ஏனென்றால் அவர் ஆவியாயிருக்கிறார். (II கொரி 3/17)

ஆவியாயிருக்கிற தேவன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக தம்மை வெளிப்படுத்தினார். ஆனால் முழுமையுமாக ஒருவருக்கும் தம்மை வெளிப்படுத்தவில்லை. பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய தூதனானவர் என்பது இயேசுவைக் குறிக்கும். தேவதூதன் சாயல் ஆண்டவர் கிதியோனுக்கு வெளிப்பட்டார். (நியா 6/13) மத் 17ல் மனுஷகுமாரன் மறுரூபமாகிக் காண்பித்தார். மகிமையின் சரீரத்தில் இருந்த மனுஷகுமாரனைத் தான் பூமியிலுள்ள மனிதர்கள் பார்த்தார்கள். ஆகவே ஜனங்கள் மனுஷகுமாரனைத் தான் பார்த்தார்கள்.

**175. யார் உத்தமன்? உத்தமனுக்கு எதை தேவன் விசேஷமாகக் கொடுப்பார்?**

வாழ்விலும், தாழ்விலும் கர்த்தரை மறுதயாமல் பின்பற்றுபவன் தான் உத்தமன், (யோபு 1/1)

1. உத்தமன் ஜீவ கிரீடம் பெறுவான் - யாக். 1/12
2. உத்தமனுக்கு தமது வல்லமையைக் கொடுப்பார் (II நா 16/9)
3. நோவா உத்தமனாக இருந்தான். ஆகவே கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதி 6/8)
4. இரட்டிப்பான ஆசீர்வாதம் கொடுப்பார் (யோபு 42/10)
5. உத்தமர்களுக்கு வல்லமையான காரியங்களைச் செய்வார் (ஆதி 17/1)
6. உத்தமமாய் நடப்பவர்வர்களுக்கு அவர் பரிசுத்த பர்வதத்தில் இடம் கொடுப்பார் (சங் 15/1,2)
7. உத்தமமாய் நடப்பவர்கள் நன்மையைச் சுதந்தரிப்பார்கள் (நீதி 28/10)

**176. 8 திறவுகோல் அதிகாரங்கள் எவைகள்? அதை யாருக்கு தேவன் கொடுக்கிறார்?**

அவர் ராஜாதி ராஜா. அவர் பிள்ளைகள் ஆளுகை செய்கிற ராஜாக்கள்; அதாவது திறவுகோல் அதிகாரங்களை பயன்படுத்துகிறவர் கள். ஆண்டவருக்கு நாம் செல்லப் பிள்ளையாகவும் இருக்கலாம். போர் வீரர்களாகவும் இருக்கலாம். நாம் ஆளுகை செய்கிறவர்களாய் இருந்தால் நமக்கு ராஜாக்கள் என பெயர். அவர் நம்மை ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் மாற்றியிருக்கிறார். ஆசாரியர்கள் என்பவர்கள் ஜெபிக்கிறவர்கள். ராஜாக்கள் என்பவர்கள் தேவ ஆளுகையை செயல்படுத்துபவர்கள். பரிசுத்தவான்களின் ஆளுகையை பூமியிலே நிறைவேற்ற 8 திறவுகோல் அதிகாரங்களைப் பெற வேண்டும்.

1. பரலோக ராஜ்யத்தின் கட்டுகிற திறவுகோல் அதிகாரம் - மத் 16/19
2. பரலோக ராஜ்யத்தின் கட்டவிழ்க்கிற திறவுகோல் அதிகாரம்-மத் 16/19
3. தாவீதின் பூட்டுகிற திறவுகோல் அதிகாரம் - ஏசாயா 22/22
4. தாவீதின் திறக்கிற திறவுகோல் அதிகாரம் - ஏசாயா 22/22

5. மரணத்தின் திறவுகோல் அதிகாரம் - வெளி 1/18

6. பாதாளத்தின் திறவுகோல் அதிகாரம் - வெளி 1/18

7. அறிவாகிய திறவுகோல் அதிகாரம் - லூக்கா 11/52

8. ஆரோனின் திறவுகோல் அதிகாரம் - எபி 9/4

**177. மகா பாபிலோன் என்ற இரகசியம் எதைக் குறிக்கும்?**

வெளி 17/18ல் ஒரு ஸ்திரியைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. பூமியின் ராஜ்யங்கள் மேல் ராஜ்யபாரம் பண்ணுகிற மகா பாபிலோன், இந்த மகா நகரம் ஒரு ஐக்கியத்தைக் குறிக்கிறது. ஆண்டவர் ஆளுகையை ஜெபத்தின் மூலம் செய்கிற கர்த்தருடைய பிள்ளைகள் யாவரும் ராஜாக்கள் தான். இந்த ராஜாக்களுக்கு விரோதமாக பொல்லாத ராஜாக்கள் எழும்புவார்கள். அதாவது மந்திரவாதிகள் கிரியை செய்வார்கள். பெரிய மந்திரவாதிகளுக்கெல்லாம் ஒரு ஐக்கியம் இருக்கிறது. இந்த ஐக்கியத்தின் பெயர் தான் மகா பாபிலோன். நாம் ஆண்டவரால் ஆளுகை செய்கிறோம். பொல்லாத ராஜாக்கள் சாத்தானால் ஆளுகை செய்கிறார்கள். இவர்கள் பலவிதமான தீமைகளை தேவ பிள்ளைகளுக்கு விரோதமாகச் செய்வார்கள்.

வெளி 17/6ல் அந்த ஸ்திரி பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவின் சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருந்தாள். மரித்த லாசரு உயிரோடு எழும்பின போது அநேகருக்கு கோபம் வந்தது. பிரதான ஆசாரியர்கள் லாசருவையும் கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்கள். லாசரு மரித்த நான்காம் நாளில் உயிரோடு எழுப்பப்பட்டான். இதனால் ஆண்டவருக்கு மகிமை உண்டானது. சாத்தானுக்கு வெட்கம் வந்தது. ஆகவே சாத்தானுக்கு சாதகமான மக்கள் லாசருவை கொலை செய்யத் தீர்மானித்தார்கள். கர்த்தருடைய பிள்ளைகளை கொல்ல வேண்டும் என்று இந்த ஐக்கியம் வெறிகொண்டிருக்கிறது.

கடைசி நாட்களில் கர்ப்பவதிகளுக்கும், பால் கொடுக்கிறவர் களுக்கும் ஐயோ! (மத் 24/19). வேதவசனமாகிய ஞானபாலைக் கொடுக்கும் ஊழியர்களுக்கு பலவிதமான சோதகைள் சாத்தானால் வரும். இயேசுவைத் தரித்திருக்கிற பிள்ளைகள் தான் கர்ப்பவதிகள். இயேசுவைத் தரிக்காத ஊழியர்களை விட்டு விடுவான். ஏனென்றால்

அவர்கள் சாத்தான் கட்சியைச் சேர்ந்தவர்கள். இந்த மகாபாபிலோன் என்பது Aetherius Society என்ற பெயரில் செயல்படுகிறது. இந்த இயக்கம் 1953ல் உருவாக்கப்பட்டது. 'Cosmic Voice' என்ற பத்திரிக்கை நடத்துகிறார்கள். இவர்கள் முதல் நோக்கம் கர்த்தருக்காக வைராக்கியமாக ஊழியம் செய்கிற கர்த்தருடைய ஊழியர்களை கொல்ல வேண்டும். கர்த்தருடைய பரிசுத்தவான்களின் கூட்டத்தை எழும்பவிடாதபடி தடை செய்வது இவர்கள் 2வது நோக்கம். பரிசுத்தவான்களின் இரத்தத்தைக் குடிக்க வேண்டும் என்ற வெறி உள்ளவர்கள். இந்த அமைப்பு உலகில் பல இடங்களில் இருக்கிறது. இந்த மகா பாபிலோனுக்கு விரோதமாய் யுத்தம் செய்ய வேண்டும். இதற்கு எதிர்த்து நிற்க வேண்டும், பயப்படக்கூடாது. கர்த்தரின் யுத்தத்தில் நாம் யுத்தவீரர்களாக செயல்பட வேண்டும். ஆட்டுக்குட்டியானவர். அவர்களை ஜெயிப்பார் (வெளி 17/14). யுத்தத்திலே நாம் தனியே இல்லை, நம்மோடு இயேசு வருகிறார்.

மகாபாபிலோன் பிடிபடும்; விழுந்தது, (வெளி 18/2). மகாபாபிலோன் முழுகிப் போகும்படி ஜெபிக்க வேண்டும் (எரேமியா 51/64)

**மகாபாபிலோன் விழும்படி ஜெபிப்போம்: (எரேமியா 50,51)**

அப்பா பிதாவே! மகா பாபிலோனின் பின்னணியிலே இருக்கிற அசுத்த ஆவிகள் சுட்டெரிக்கப்படுவதாக. அசுத்த ஆவிகளின் காவல் வீடுகள் ஆண்டவரால் நொறுக்கப்படுவதாக. மகாபாபிலோன் ஐக்கியம் சிதறப்படுவதாக. அதன் பின்னணியிலுள்ள ஐக்கியம் வாய்க்காமல் போவதாக. மகா பாபிலோனின் இரத்த வெறி அடங்குவதாக; கட்டிப் போடப் படுவதாக. இதற்கு ஒத்தாசை செய்யும் பணபலம், பொக்கிஷங்கள் ஆண்டவரின் பட்டயத்தால் அழிக்கப்படுவதாக, மகாபாபிலோனின் பின்னணியிலுள்ள வேசித்தன ஆவிகள், வேசித்தன ஜனங்கள் கட்டிப்போடப்படுவார்களாக. இதன் பின்னணியிலுள்ள அந்திகிறிஸ்துவின் பெலன் அழிக்கப்படுவதாக; கள்ளத் தீர்க்கதரிசியின் கிரியை அழிக்கப்படுவதாக. பாபிலோனின் சிலைகள், விக்கிரகங்கள் கர்த்தரால் நொறுக்கப்படுவதாக. தாகோன் விழுந்தது போல விழுவதாக; இலச்சை அடைவதாக.

விசேஷித்த தூதர்களை பரலோகத்திலிருந்து பாபிலோனுக்கு விரோதமாக அனுப்புவீராக. அவர்கள் அம்புகள் சாமர்த்தியமுள்ள பராக்கிரமசாலிகளின் அம்புகளைப் போல இருப்பதாக. அந்த அம்புகள் விருதாவாய் திரும்பாதிருப்பதாக. பாபிலோன் எங்களுக்கு செய்தது

போல அதற்கு செய்வீராக. ஆண்டவர் தம் தூதர்களை அனுப்பி மகாபாபிலோனை விழப்பண்ணுவீராக; இந்த பொல்லாத அமைப்புக்கு விரோதமாக உம் யுத்தம் நடப்பதாக. உம் பட்டயத்தை பொய்களைப் பிணைக்கிறவர்கள் மேலும், ஞானிகளின் மேலும், பராக்கிரம சாலிகளின் மேலும், பொக்கிஷங்கள் மேலும், அவர்கள் குதிரைகள் மேலும் அனுப்பும். சோதோம் கொமோராவைப் போல பாபிலோன் கவிழ்க்கப்படுவதாக. பாபிலோன் குமாரத்திக்கு விரோதமாகவும், அவள் படை பெலத்திற்கு விரோதமாகவும் பட்டயம் கடந்து செல்வதாக. ஆவிக்குள்ளாக்கி உம் ஊழியர்களை அனுப்பும். இதன் பின்னணியி லிருக்கும் கேடான பர்வதமாகிய சாத்தானுக்கு விரோதமாக கர்த்தரே வந்து, அதற்கு விரோதமாக உம் கையை நீட்டி கன்மலையின் மேலிருந்து உருட்டி, எரிந்து போன பர்வதமாக்கி அதை சுட்டெரிப்பீராக. சமுத்திரம் போல பாபிலோனுக்கு விரோதமாக ஆவியானவர் புரண்டு வருவீராக. பாபிலோனின் ஐசுவரியம் ஒரே நாளில் அழிந்து போவதாக. பாபிலோன் தள்ளுண்டு இனி ஒரு போதும் இராமற்போவதாக. தேவன் தமது ஆலயத்திற்காகப் பழிவாங்குவீராக. கொடிய மந்திரவாதிகளுக்கு விரோதமாய் இருப்புக்கோல் அதிகாரம் கொண்டு யுத்தம் பண்ணுவீராக. விசேஷித்த 7 மடங்கு அக்கினி வல்லமை மகாபாபிலோனின் தாபரங்களுக்கு விரோதமாகக் கடந்து சென்று யுத்தம் செய்வதாக. மகாபாபிலோன் விழுந்து போவதாக; முழுகிப் போவதாக. ஆமென்.

**178. "யெகோவா மேக்கா" என்றால் பொருள் என்ன?**

இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப் போல அவர்களை உடைத்துப் போடுவார். (சங்2/9). ஆகவே அவர் பெயர் 'யெகோவா மேக்கா'. யேகோவா மேக்கா என்றால் 'அடிக்கிற கர்த்தர்' என பொருள். உங்களை அடிக்க வருகிற துன்மார்க்கனையும், சாத்தானையும் அவர் அடிப்பார் ஆகவே தான் ஒரு கன்னத்தில் உன்னை அடித்தால், மறு கன்னத்தையும் திரும்பக் காட்டச் சொன்னார். நான் பதில் செய்வேன். நீ சும்மாயிரு என சொல்கிறார். அவர் பிரமாணங்கள் பாரமானவைகளல்ல. எல்லாம் இலகுவானது. சில காரியங்களிலே நாம் வாயைத் திறக்கவே கூடாது. வாயைத் திறந்தால், நாம் தான் குற்றவாளிகளாகத் தீர்க்கப்படுவோம். கர்த்தர் அவர்களுக்கு முன்பாக நம்மை உயர்த்துவார். கொடிய பலவந்தனான துன்மார்க்கன் பச்சை மரத்தைப் போல தழைத்தவனாக இருந்தாலும் அவன் ஒழிந்து

போவான். அவன் இல்லை; அவனைத் தேடினேன். அவனைக் காணவில்லை. (சங் 37/35) கொடிய துன்மார்க்கர்களையும், கொடிய பிசாசுகளையும் அடிக்க கர்த்தர் யெகோவா மேக்காவாக இருக்கிறார்.

**யெகோவா மேக்காவாய் கர்த்தர் செயல்பட ஜெபிப்போம்:**

அப்பா பிதாவே! கொடிய பிசாசுகள், மரணக் கட்டுகள், பாதாளக் கட்டுகள், வேதாளக்கட்டுகள், கொடிய பாவிகள் எங்களோடு போராடுகிறார்கள். அவர்கள் அடித்த அடியினால் நிந்தையினால் நிறைந்தவர்களாக இருக்கிறோம். மந்தையை நிந்தை பிடித்துக் கொண்டது கொடிய பாவிகளால் வந்த நிந்தைகள், வேதனைகள், துன்பங்கள், கொடிய பிசாசுகளால் வந்த வேதனைகள், துன்பங்கள் எத்தனை! எத்தனை! யாரிடத்தில் போவோம் கர்த்தாவே! அடிக்கிற கர்த்தராய் வாரும். இருப்புக் கோல் அதிகாரம் செயல்படுவதாக. கர்த்தருடைய ஓங்கிய புயம் எழும்பி யுத்தம் செய்வதாக. ஆமென்.

**179. சாத்தானின் சிங்காசனம் எப்படி சுட்டெரிக்கப்பட வேண்டும்?**

சாத்தானின் சிங்காசனம் இருக்கிற இடத்தில் தான் நாம் இருக்கிறோம். தேவனின் கிருபையினால் அவர் சிங்காசனம் இந்த பூமியில் ஸ்தாபிக்கப்படும் என ஏசாயா 16/5 கூறுகிறது. அவர் சிங்காசனம் ஸ்தாபிக்கப்படும் போது துரிதமாய் நியாயம் கிடைக்கும். ஆண்டவர் தம் சிங்காசனத்தில் நியாயாதிபதியாய் உண்மையோடே வீற்றிருப்பார்.

வெளி 4/2ல் வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஒருவர் வீற்றிருந்தார். அந்த சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது. 24 சிங்காசனங்கள் அதை சுற்றி இருந்தது. பரலோக சிங்காசனத்திருந்து மின்னல்கள், இடிமுழக்கங்கள், சத்தங்கள் புறப்பட்டது (வெளி4/5). பரலோக சிங்காசனத்திருந்து இடிமுழக்கம், மின்னல், சத்தம் கடந்து வந்து சாத்தானின் சிங்காசனத்தை எரிக்க வேண்டும்.

**சாத்தானின் சிங்காசனம் சுட்டெரிக்கப்பட ஜெபிப்போம்:**

அப்பா பிதாவே! தேவனுடைய 7 ஆவிகளாகிய 7 அக்கினித் தீபங்கள் பிசாசை சுட்டெரிப்பதாக. பரிசுத்த ஆவியின் அக்கினி வல்லமை இறங்கி வந்து சாத்தானின் சிங்காசனத்தை சாம்பலாக்குவதாக.

ஆண்டவரின் சிங்காசனத்திருந்து வல்லமைகள் புறப்படுவதாக. ஆண்டவரின் இடிமுழக்க சத்தம் கடந்து வருவதாக. கர்த்தரின் கோபத்திற்கு முன்பாக நிற்பவன் யார்? ஆண்டவரின் சிங்காசனத்திற்கு கீழிருக்கிற கேருபீன்கள் மத்தியில் இருக்கிற அக்கினியை எடுத்து சாத்தானின் சிங்காசனத்தின் மேல் இறைப்பீராக. இதன் சிங்காசனம் அவிந்து இல்லாமல் போவதாக.

அந்திகிறிஸ்துவின் சிங்காசனம் சுட்டெரிக்கப்படுவதாக. சாத்தானின் நுகத்தடியையும், மிலாற்றையும், கோலையும் ஆண்டவர் முறிப்பீராக. ஆண்டவர் தம் உருவின பட்டயத்தோடு கடந்து வந்து சாத்தனை வெட்டிப் போடுவீராக. சமாதானத்தின் தேவன் தாமே சீக்கிரமாக சாத்தானை எங்கள் கால்களின் கீழாக நசுக்கிப் போடுவீராக. சாத்தான் மேல் ஜெயம் உண்டாவதாக. ஆமென்.

### 180. நம் ஜீவனுக்கு அதிபதி யார்?

யோபுவைப் போல நமக்கு சோதனைகள் வந்தாலும், நம் ஜீவனைத் தொட தேவன் அனுமதி கொடுக்க மாட்டார். சாவை வென்ற தேவன் மரணத்தின் மேல் அதிகாரம் உடையவராக இருக்கிறார். ஜீவன் மேல் அதிகாரம் உடையவர் இயேசுவே. ஒரு மனிதன் எத்தனையோ கோடிக்கு அதிபதியாக இருக்கலாம்; ஆனால் அவன் தன் ஜீவனுக்கு அதிபதி அல்ல. அவர் நம் ஜீவனுக்கு அதிபதியாக இருக்கிறபடியால், ஜீவனுள்ள நாளெல்லாம் அவரைத் தொழுது கொள்ள வேண்டும். எத்தனையோ துன்பங்கள் வந்தாலும் உன் ஜீவனை ஆண்டவர் காத்துக் கொள்வார். “என் ஜீவனுக்கு அதிபதியாக இருக்கும் ஆண்டவர், என் ஜீவனைக் காக்க வல்லவர், மரணத்தை ஜெயித்த ஆண்டவர் என் வாழ்க்கையில் வரும் மரணக்கட்டுகளை அழிக்கவும், ஜெயிக்கவும் வல்லவர். பாதாளத்தை ஜெயித்த ஆண்டவர் என் வாழ்வில் வரும் பாதாளக் கட்டை மாற்றுவார். உயிரோடு எழுந்த ஆண்டவர் என்னை உயிர்ப்பிக்க வல்லவர்” என்பதை விசுவாசிக்க வேண்டும்.

### 181. ஏன் விண்ணுக்குரியவரைச் சார்ந்து கொள்ள வேண்டும்?

காணக்கூடாத கடவுளை நமக்குக் காட்டும்படியாக மனுஷனாக ஆண்டவர் வந்தார். ஆண்டவர் பரலோகத்திருந்து வந்தவர். நாம் மண்ணிருந்து வந்தவர்கள். மண்ணானது தான் முன்னிருந்த

மண்ணுக்கே திரும்பும் (பிரசங்கி 12/7). ஆகவே ஒருவனும் இந்த உலகில் நிலைத்திருப்பதில்லை. நிலைத்திருப்பது ஒன்றே. மெய்ப் பொருளாகிய இயேசு மட்டுமே. நாம் காண்பது எல்லாம் பொய்ப்பொருள். ஏனென்றால் அவை அழிந்து போகும். முடிவுபரியந்தம் நிலைத்திருப்பது நம்மை விட்டு எடுபடாத நல்ல பங்காகிய ஆண்டவராகிய இயேசு. இந்த மெய்பொரு ளாகிய இயேசுவை நீ மண்ணுக்கு போவதற்கு முன்பு நினைக்க வேண்டும்.

நாளை நடப்பது நமக்குத் தெரியாதபடியால் ஆண்டவரை சார்ந்து கொள்ள வேண்டும். (யாக்.4/14). நாளை நடக்கும் காரியத்திற்காக குழம்பி கவலைபடக்கூடாது. பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என எப்போதும் அவரைச் சார்ந்து கொள்ளுங்கள். உன் பெலத்தினாலோ, உன் ஞானத்தாலோ நீ காக்கப்பட முடியாது. ஆனால் கிருபையால் தான் நீ காக்கப்பட முடியும். மண்ணாக நாம் இருக்கிற படியால் விண்ணுக்குரிய ஆண்டவரை நாம் சார்ந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நாம் பிழைக்க முடியாது.

சாகப்போகிற மனுஷனின் மதிப்பையோ, மிதிப்பையோ பெரிதாக எண்ணாதிருங்கள். மனுஷனின் நிந்தனையைக் குறித்து பயப்படக்கூடாது. சாகப் போகிற மனுஷனின் நிந்தனைக்கும், பயமுறுத்தலுக்கும் கலங்கக்கூடாது. மனுஷன் வாழ்நாள் புல்லைப் போலவும், பூவைப் போலவும், நிழலைப் போலவும் இருக்கிறது. சிலருக்கு கொஞ்சம் பணம் இருந்தால் போதும், கொஞ்சம் படிப்போ அழகோ இருந்தால் போதும், எங்கேயோ இருந்து இறங்கி வந்ததாக நினைக்கிறார்கள். மண்ணான மனுஷன் மண்ணுக்கே திரும்புவான். ஆகவே விண்ணுக்குரிய ஆண்டவரை நோக்கிப் பார்.

### 182. ஏன் எதைக் குறித்தும் மேன்மை பாராட்டக்கூடாது?

ஒரு மரத்தை வெட்டிப் போட்டாலும் மீண்டும் தழைக்கும். ஒரு மரத்திற்கு நம்பிக்கை இருக்கிறது. மனுஷனுக்கோ நம்பிக்கை இல்லை. நம் நாட்கள் குறுகியது. நாம் மேன்மைபாராட்ட நமக்கு ஒன்றும் இல்லை. மண்ணானது தான் முன்னிருந்த மண்ணுக்கே திரும்பும். நாமும் மண்ணுக்குத் திரும்புவோம். "என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது. என் பிராணன் காற்றைப் போல இருக்கிறது" என யோபு 7/6ல் வாசிக்கிறோம். நம் ஜீவனோ, நம் கை

கால்களோ நம் நம்பிக்கை அல்ல. நமக்கு உண்டானது நம் நம்பிக்கை அல்ல. ஆகவே எதையும் குறித்து மேன்மை பாராட்டாதிருங்கள். ஞானத்தைக் குறித்தோ, அறிவைக் குறித்தோ, பராக்கிரமத்தைக் குறித்தோ, ஐசுவரியத்தைக் குறித்தோ மேன்மை பாராட்டக் கூடாது. ஆண்டவரை உயர்த்துங்கள். எல்லாவற்றிலும் துதி, கனம், மகிமை ஆண்டவருக்கே செலுத்துங்கள். ஆண்டவர் உங்களை பயன்படுத்தினால் அவரை மகிமைப் படுத்துங்கள். 'இது என் கிரியை அல்ல, இது கர்த்தரின் கிரியை' என சொல்□எப்போதும் கனத்தையும் மகிமையையும் ஆண்டவருக்கே செலுத்த வேண்டும். அதிலே ஆண்டவரும் பிரியமாய் இருப்பார்.

**183. கர்த்தருக்கென்று காணிக்கை எப்படி செலுத்த வேண்டும்?**

ஒரு ஸ்திரி விலையேறப் பெற்ற பரிமளதைலத்தை ஆண்டவர் சிரசின் மேல் ஊற்றினாள். சீஷர்கள் அதைப் பார்த்து "இந்த வீண் செலவு என்னத்திற்கு? இதை, விற்று தரித்திரருக்கு கொடுக்கலாமே!" என்றார்கள். நம் யோசனையின்படி இது சரி போல தெரியலாம். அதற்கு இயேசு, "தரித்திரர் எப்போதும் உங்களோடு இருக்கிறார்கள், நான் எப்போதும் உங்களோடு இரேன்; இந்த சுவிசேஷம் எங்கெல்லாம் அறிவிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் அவள் செய்ததும் சொல்லப்படும்" என்றார். **வீண்செலவு** என மக்கள் சொல்□ய காரியத்தை தேவன் மகிமையாக எண்ணினார். கர்த்தருக்கடுத்த காரியமாக நீங்கள் செலவு செய்வதை வீண் காரியம் என நினைக்கக் கூடாது. ஏழை விதவை இரண்டு காசு போட்டாள்; கொடுக்கிற அளவின்படி அல்ல, இருதய அளவின்படி கர்த்தர் ஏற்றுக் கொள்வார்.

மனப்பூர்வமாய் செலுத்தும் காணிக்கைகளை கர்த்தர் ஏற்றுக் கொள்வார். காணிக்கை செலுத்திய உடனே பதில் கிடைக்கும் என எண்ணக் கூடாது. உன் இருதயத்தில் நீ ஆண்டவர் மேல் வைக்கும் அன்பின் அளவைப் பார்க்கிறார். மனப்பூர்வமாய் நீ செய்யும் காரியத்திலே உனக்கு ஆண்டவர் உதவி கிடைக்கும். மரியாள் ஆண்டவர் மேல் வைத்த அன்பின் மிகுதியால் பரிமளதைலம் ஊற்றினாள். தன் அன்பை வெளிப்படுத்தினாள். ஆகவே பரிமளதைலம் பெரிதல்ல; ஆண்டவர் மேலுள்ள அன்பே பெரியது. அவருக்காக செய்கிற காரியங்களை நீ மனப்பூர்வமாகச் செய்யும் போது அவர் அதை ஏற்று உன்னை ஆசீர்வதிப்பார்.

**184. சொப்பனங்கள் எத்தனை வகைப்படும்?**

4 விதமாய் சொப்பனங்கள் வரலாம்

1. மாயையான சொப்பனம் (பிரசங்கி 5/7) - இதில் அர்த்தம் ஒன்றும் இருக்காது.

2. தொல்லையின் திரட்சியினால் சொப்பனம் பிறக்கும் - ஏதாவது பிரச்சனை இருக்கும்; அதை ஜெபத்தின் மூலம் தேவனுக்கு தெரியப்படுத்தாமல் பிரச்சனையை நினைத்துக் கொண்டே தூங்கினால், அந்த தொல்லையின் திரட்சியினால் சொப்பனம் வரும்.

3. சாத்தானால் வரும் சொப்பனம் - பிசாசு உங்களை ஆண்டவரை விட்டு பிரிக்கும்படியாக கொண்டு வருகிற சொப்பனம் இது.

4. தேவன் காட்டும் சொப்பனம் - யோசேப்புக்கு தேவன் சொப்பனம் காண்பித்தார். அது அப்படியே நிறைவேறியது.

மத் 13/35ல் மனுஷன் நித்திரை பண்ணும் போது அவன் சத்துரு வந்து கோதுமைக்குள் களைகளை விதைப்பான். சொப்பனத்திலே பிசாசு உங்களை ஏமாற்ற முடியும். பிசாசு ஒரு தூதனைப் போல வந்து உங்களை ஏமாற்றலாம் அல்லது ஊழியக்காரர்களைப் போல வந்தும் உங்களை ஏமாற்றலாம். வேதவசனத்திற்கு ஒத்தும் இசைந்தும் இருந்தால் இந்த சொப்பனங்களை நாம் ஏற்றுக் கொள்ளலாம். வேத வசனத்திற்கு மாறாக இருந்தால் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

**185. வஞ்சிக்கிற ஆவிகளுக்கு விலகியிருப்பது எப்படி?**

சாத்தானின் சத்தம் எது, ஆண்டவரின் சத்தம் எது என்பதை அறிந்திருக்க வேண்டும். ஆடுகள் மேய்ப்பனின் சத்தத்தை அறிந்திருக்கிறபடியால் அவனுக்கு பின் செல்லுகிறது. மேய்ப்பன் ஒரு குரல் கொடுத்தால் ஆடுகள் எல்லாம் அவன் பின்னாலே போகும். கள்ளன் சத்தம் கேட்டால் அவன் பின்னால் போகாது. அது போல ஆண்டவர் சத்தம் போல குரல் கொடுத்து பிசாசு வருவான். ஆண்டவர் சத்தம் கேட்டுப் பழகினவர்களுக்கு அவர் சத்தம் நன்றாகத் தெரியும். நம் சொப்பனத்தில் சாத்தான் வந்து நம்மை ஏமாற்றலாம். அந்நியனுடைய சத்தத்தை அறியாதபடியால் அவைகள் அவனை விட்டு ஓடிப்போகும் (யோ.10/5)

உபதேசத்தைக் குறித்தும் நாம் கவனமாக இருக்க வேண்டும். ஒரு புத்தகம் உங்கள் கைகளில் கிடைக்கிறது. அதை எழுதினவரின் பெயர் வெளியே போடப்பட்டிருக்கிறது. புத்தகத்தைப் பார்த்தால் நல்லதாகத் தெரிகிறது. அதைத் திறந்து கொஞ்சம் வாசிக்கும் போதே உங்கள் ஆவிக்கும் அதற்கும் ஒத்துப் போகவில்லையென்றால் அதைப் படிக்காமல் எடுத்து ஒதுக்கி வைக்க வேண்டும். அது மேய்ப்பன் சத்தமா? இல்லையா? என்பதை நாம் நிதானித்துப் பார்க்க வேண்டும். வஞ்சிக்கிற பிசாசின் உபதேசங்களுக்கு நாம் செவி கொடுக்கக் கூடாது.

தேவனால் உண்டானவர்கள் அவருக்கு செவி கொடுப்பார்கள். தேவனால் உண்டாகாதவர்கள் அவருக்கு செவி கொடுக்க மாட்டார்கள். (II யோ 4/3). வஞ்சக ஆவி எது என்பதையும் கள்ள உபதேசம் எது என்பதையும் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். வஞ்சிக்கிற ஆவிகளால் எழுதப்பட்ட புத்தகங்களையும் நாம் வாசிக்கக்கூடாது. வஞ்சக ஆவியால் நடத்தப்படுகிற சபைகளுக்குள்ளும் போகக் கூடாது. வஞ்சக ஆவிகளோடு உள்ள விசுவாசிகளோடு ஐக்கியம் வைக்கக்கூடாது. ஐக்கியம் வைத்தால், நீங்களும் அதைப் போல மாறிவிடுவீர்கள். சாலமோன் நீதிமொழிகள், உன்னதப்பாட்டு, பிரசங்கி எழுதியிருக்கிறான்; ஆலயமும் கட்டினான். மகிமையையும் பார்த்தான். ஆனாலும் கடைசியில் வஞ்சக ஆவியுள்ள ஜனங்களோடு ஐக்கியப்பட்டதால், விழுந்து போனான். பாவிகளோடு ஐக்கியப் பட்டால் நாமும் அவர்கள் வழக்கத்திற்குள் வந்து விடுவோம்.

### 186. கர்த்தரின் சித்தம் எது என்பதை எப்படி அறிந்து கொள்வது?

பெர்சியா ராஜாவாகிய கோரேஸை தேவன் ஏவினார். பரலோகத்தின் தேவன் தமக்குச் சித்தமானதைச் செய்யத் தக்கதாக அவருக்குப் பிரியமான மக்களை ஏவுவார். முதலாவது கர்த்தர் ஏவுகிறார். இரண்டாவது கட்டளையிடுகிறார். நாம் நினைப்பதெல்லாம் கர்த்தரின் சித்தம் என சொல்ல முடியாது. நாம் இஷ்டபடுவதெல்லாம் கர்த்தர் சித்தம் என சொல்ல முடியாது. நாம் செய்வதெல்லாம் கர்த்தரின் சித்தம் என சொல்ல முடியாது. ஒரு காரியம் கர்த்தரின் சித்தமாக இருந்தால், அதைக் குறித்து கர்த்தர் முன்னறிவிப்பார். கர்த்தர் தமது தீர்க்கதரிசிகளுக்கு ஒரு காரியத்தை சொல்லாமல் அதைச் செய்ய மாட்டார். கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அதைத் தடுக்க எந்த மனுஷனாலும் முடியாது. கர்த்தர் ஏவுவாரென்றால் அது தேவ சித்தம்.

கர்த்தர் நோவாவுக்கு பேழைக் கட்டும்படி கட்டளையிட்டார். அவன் கர்த்தர் தனக்குக் கட்டளையிட்ட படியெல்லாம் செய்து முடித்தாள்.

**187. கர்த்தர் சித்தம் யாரைக் கொண்டு நடக்கும்?**

கர்த்தர் சித்தம் அவர் பிள்ளைகளைக் கொண்டு நிறைவேற்றப் படும். நாம் அவர் பிள்ளையாக மாறாவிட்டால் நம்மைக் கொண்டு அவர் சித்தம் நடக்காது. அது இன்னொருவரால் நடக்கும். வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவரின் சித்தம் இந்த பூமியிலே கண்டிப்பாக நடக்கும். அதை மனுஷன் தடுக்க முடியாது. பரலோகத்திலே உம் சித்தம் செய்யப்படுவது போல் பூமியிலேயும் செய்யப்படுவதாக என நாம் ஜெபிக்க வேண்டும். பரலோகத்திலே தேவ தூதர்களைக் கொண்டு தேவ சித்தம் செய்யப்படுகிறது. அது போல பூலோகத்திலும் ஆண்டவர் சித்தம் செய்யப்பட வேண்டும். கர்த்தரின் சித்தத்திற்கு நாம் இசைந்து வர வேண்டும். அவர் பிள்ளைகளாக இருக்கிறபடியால் அவர் சித்தம் செய்ய நாம் அழைக்கப்படுகிறோம்.

**188. ஏன் தேவசித்தம் செய்ய வேண்டும்?**

தேவபிள்ளைகளாக மட்டும் இருந்தால் பரலோகம் போய்விட முடியாது. (மத்7/21). நீ பாவம் செய்யாமல் இருந்தால் மட்டும் போதாது. நீ கர்த்தரின் சித்தத்தையும் செய்ய வேண்டும். கர்த்தர் சித்தம் செய்யாமல் இருப்பதும் பாவம். அவரவர் அழைப்பின்படி அவரவர் தேவ சித்தம் செய்ய வேண்டும். கொஞ்சமாய் அல்ல; பூரணமாய் செய்து முடிக்க வேண்டும்.

**189. நாம் செய்வது தேவ சித்தம் தானா என்பதை எப்படி கண்டறிவது?**

நம்மைக் குறித்த தேவசித்தம் என்ன என்பதை பகுத்தறிய வேண்டும். ஆண்டவர் சித்தம் செய்தால் என்ன கிடைக்கும் என்று உலகக்கவலைக்கு இடம் கொடுக்கக் கூடாது. நம் தேவைகளை தேவன் நிச்சயமாகத் தருவார். தேவனுடைய வேலையை செய்வது தான் தேவ சித்தம். நாம் தினமும் நமக்கடுத்த வேலைகளைச் செய்யலாம். ஆனால் ஆண்டவர் நாம மகிமைக்காக ஏதாவது ஒரு பணியை கர்த்தரின் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் வைத்திருக்கிறார். அது என்ன வேலை என்பதை பகுத்தறிய வேண்டும். அந்த சித்தத்திற்கு நம்மை மனப்பூர்வமாய் ஒப்புக் கொடுக்க வேண்டும்.

## 190. தேவசித்தம் செய்யும் போது வரும் பிரச்சனைகளை எப்படி மேற்கொள்வது?

பரலோகில் தேவ சித்தம் செய்ய எந்த தடையும் இல்லை. பரலோகில் நம்மை தடை செய்ய எந்த துன்மார்க்கனும் இல்லை; சாத்தானும் இல்லை. நம்மை தேவ சித்தம் செய்ய விடாத பாவிகளையும், பிசாசுகளையும் கட்டி ஜெபிக்க வேண்டும். அதற்காகத் தான் நமக்கு திறவுகோல் அதிகாரத்தை தேவன் கொடுத்திருக்கிறார். பரலோகத்தின் கட்டுகிற திறவுகோல் அதிகாரத்தைக் கொண்டு கட்டப்பட வேண்டியவை களை நாம் கட்டி ஜெபிக்க வேண்டும். அப்போது கொடிய பாவிகளும், பிசாசுகளும் தேவ சித்தத்தைத் தடுக்க முடியாது. சாத்தானின் தடைகளையும், மனுஷீக தடைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

ஆதி 10/8ல் நிம்ரோத் என்பவன் பூமியிலே கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரனாக இருந்தான் என எழுதப்பட்டுள்ளது. உலகத்துக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரன் என்றால் சிங்கம், பு□ கரடியை வேட்டையாடுபவன் என கொள்ளலாம். கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரனென்றால் சாத்தானின் மேல் இவனுக்கு வெற்றி உண்டு என பொருள். நாம் தேவ சித்தம் செய்ய விரும்பினால் மட்டும் போதாது எதிர்த்து வரும் சாத்தானை ஜெயிக்க வேண்டும். உபவாச ஜெபத்தோடு சாத்தானை எதிர்க்க வேண்டும். சாத்தான் மேல் ஜெயம் எடுக்காமல் நீ தேவசித்தத்தை செய்து நிறைவேற்ற முடியாது.

தேவசித்தம் தானாக நடக்கும் என நினைக்கக் கூடாது. அது உன்னைக் கொண்டு நடக்க வேண்டுமானால் நீ தான் அதற்காகப் பிரயாசப்பட வேண்டும்; உபவாசித்து ஜெபிக்க வேண்டும். தேவ சித்தம் செய்கிறவர்களுக்கு சாத்தானால் கட்டுகளும், மனுஷரால் உபத்திரவங்களும் வரும். இந்த 2 வித தீமைகளும் நாம் தேவசித்தம் செய்ய விடாதபடிக்கு நம்மோடு போராடும். சாத்தானும், சத்ருவும் நம்மோடு போராடுகிறபடியால் நாம் தேவசித்தம் செய்யவில்லை என நினைக்கக்கூடாது. சாத்தானும், சத்ருவும் சில காரியங்களைக் கெடுத்தபடியால் தேவசித்தத்தை நாம் செய்யவில்லை என நினைக்கக் கூடாது. மனுஷன் கோணலாக்கினாலும், அது தேவசித்தமாக இருந்தால் தேவன் அதை நேராக்குவார். தேவசித்தத்தை யார் தடை செய்தாலும், நாம் அதை நிறுத்தி விடக்கூடாது.

தேவசித்தத்தை நிறைவேற்ற பொறுமை தேவை. பொறுமையை இழக்கக்கூடிய அளவுக்கு துன்பங்கள் வந்தாலும் பொறுமையை இழந்து போகக்கூடாது. தேவசித்தமானால் அது உறுதியாக நடக்கும் என்பதை விசுவாசிக்க வேண்டும். எதைக் கண்டும் கவலைப்படக்கூடாது. உயிரைக் குறித்தும் பயப்படக்கூடாது. கட்டுகளைக் குறித்தும் பயப்படக்கூடாது. கட்டி ஜெபிக்கும் போது கோணலானவைகள் நேராகும், பள்ளங்கள் நிரம்பும், மேடுகள் தாழ்த்தப்படும், கரடு முரடானவைகள் சமமாகும்.

1. தேவசித்தமான காரியமாக இருந்தால் அதற்காக தொடர்ந்து ஜெபிக்க வேண்டும்.
2. தேவன் பார்த்துக் கொள்வார் என்று விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும்.
3. விசுவாசத்தையும், தைரியத்தையும் விட்டு விடக்கூடாது.
4. பொறுமையை விட்டுவிடக்கூடாது.
5. தேவசித்தத்தை செய்ய தடையாயுள்ள பாவங்களில் நாம் விழுந்து போகக்கூடாது.
6. பிசாசின் சோதனையில் நாம் விழுந்துவிடக்கூடாது.
7. துன்மார்க்கர் சோதனையில் நாம் விழுந்து விடக்கூடாது.
8. ஆண்டவரே நம்மைச் சோதிக்கும் போது அதிலே விழுந்து போகாமல், விசுவாசத்திலே உறுதியாயிருக்க வேண்டும்.
9. நமக்கு பேர் உண்டாகச் செய்யக்கூடாது. ஆண்டவருக்கு பேர் உண்டாகப் பண்ண வேண்டும். அவருக்கு மகிமை சேர்க்க வேண்டும்.
10. எதைக் குறித்தும் பயப்படக்கூடாது.
11. உலகக்கவலையில் விழுந்துவிடக்கூடாது.
12. விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமான இயேசுவை நோக்கி நாம் ஓட வேண்டும்.
13. பின்வாங்கிப் போய் தேவசித்தம் செய்வதை நிறுத்திப் போடக் கூடாது.

## தற்பரிசோதனைக்கேள்விகள்:

**326.** சோர்ந்து போகாமல் நன்மை செய்கிறாயா? - கலா 6/9

**327.** விசுவாச குடும்பத்தார்களுக்கு உன்னால் இயன்ற நன்மை செய்கிறாயா? - கலா 6/10

**328.** எதைக் குறித்து மேன்மை பாராட்டுகிறாய்? இயேசுவைக் குறித்தா அல்லது உலகத்தைக் குறித்தா? - கலா 6/14

**329.** உன் அன்பில் பரிசுத்தமுண்டா? அல்லது குற்றம் உண்டா? - எபே 1/4

**330.** இடைவிடாமல் ஜெபிக்கிறாயா? - எபே 1/16

**331.** ஞானத்தின் ஆவியும், தெளிவை அளிக்கிற ஆவியையும் பெற்றிருக்கிறாயா? - எபே 1/17

**332.** உன் மனக்கண்கள் பிரகாசமாக உள்ளதா? - எபே 1/19

**333.** உன் உள்ளான மனுஷன் பரி. ஆவியின் வல்லமையால் நிரம்பியுள்ளதா? - எபே 3/16

**334.** அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து கொள்ளுகிறீர்களா? - எபே 4/1

**335.** மனத்தாழ்மை, சாந்தம், நீடிய பொறுமை, அன்பு உன்னில் உள்ளதா? - எபே 4/2

**336.** ஆவியின் ஒருமையை எப்போதும் காத்துக் கொள்கிறாயா? - எபே 4/3

**337.** சத்தியத்தை அன்புடன் கைக்கொள்ளுகிறாயா? அல்லது தந்திரமுள்ள வஞ்சிக்கிற போதகங்களினால் அடிபட்டு அலைகிறாயா? - எபே 4/14,15

**338.** வீணான சிந்தையில் நடக்கின்றாயா? - எபே 4/17

**339.** உன் பழைய சுபாவங்கள் மாறியுள்ளதா? - எபே 4/22

**340.** பொய் பேசுகிறாயா? அல்லது உண்மை பேசுகிறாயா? - எபே 4/23

**341.** பிசாசு உன்னில் இடம் பிடிக்க இடம் கொடுக்கின்றாயா? - எபே 4/27

**342.** கெட்ட வார்த்தை பேசுகிறாயா? அல்லது பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை பேசுகிறாயா? - எபே 4/29

**343.** பரிசுத்த ஆவியை உன் நடக்கைகள் மூலம் துக்கப்படுத்துகிறாயா? அல்லது சந்தோஷப்படுத்துகிறாயா? - எபே 4/30

**344.** கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம் போன்ற துர்க்குணங்களை உன்னைவிட்டு அகற்றி விட்டாயா? - எபே 4/31

**345.** பிறர் குற்றங்களை மன்னிக்கிறாயா? - எபே 4/32

**346.** பரியாசம் பண்ணுகிறாயா? அல்லது தேவனை எப்போதும் ஸ்தோத்தரிக்கின்றாயா? - எபே 4/4

**347.** பொருளாசை என்னும் பாவம் உன்னில் உண்டா? - எபே 5/5

**348.** வெளிச்சத்தின் பிள்ளையாய் நடக்கின்றாயா? - எபே 5/8

**349.** கர்த்தருக்குப் பிரியமானது எது என்பதை சோதித்துப் பார்த்து அதை செய்கிறாயா? - எபே 5/10

**350.** உன் நாட்களைப் பிரயோஜனப்படுத்துகிறாயா அல்லது வீணாக்குகிறாயா? - எபே 5/16

# புதிய வெப்ஸைட்

**I 1. VISIT OUR NEW WEBSITE**
(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

**2. WEBSITE ADDRESS IS www.hosannahchurch.org**
(இணையதள முகவரி : **www.hosannahchurch.org)**

**3. FEATURES INSIDE** (உள்ளே)

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா - ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வாபிர் பகுதி - ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் - ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் - ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS
(அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

---

# பெண்கள் எழுப்புதல் ஜெபம்

## "ÏQNô-Vô] v§ÃûVd Liô ©¥lTYu Vôo? AYÞûPV ®ûX ØjÕdLû[l Tôod¡Ûm EVokRÕ'' - ¿§. 31/10

**இடம் : ஓசன்னா ஆலயம், பணகுடி**

**நாள் : 15-9-2010 புதன் கிழமை**

**நேரம் : காலை 10 மாலை 2 மணி வரை**

**அதற்குப் பின் மதிய உணவு வழங்கப்படும்.**

**நம் இந்திய தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபிக்க கடந்து வருமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.**